(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(23).] **பாராளுமன்றம்**

# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 டிசெம்பர் 15 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 சனவரி 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3207/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி அபிவிருத்தி நிதியத்திலுள்ள பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளுக்காக கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் சதவீத அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3217/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தின் பொதுப் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கென நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அப்பணிகள் நிறைவு செய்யப்படாத கட்டடங்கள் இலங்கையில் இருப்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) அக்கட்டடங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அக்கட்டடங்களுக்கான நிர்மாணப்பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3235/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1000 தேசிய பாடசாலைகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக இன்றளவில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் எண்ணிக்கையானது சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் என்றவாறு மாகாண மற்றும் மாவட்ட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக பாடசாலைகளைத் தெரிவு செய்யும் போது மக்கள் தொகை கூட்டமைவு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் 3/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக பாடசாலைகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3263/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரின் மீன்களை ஏற்றுமதி செய்யும் கைத்தொழில் பேருவளை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(ii) மீன்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்கள் காரணமாக இன்றளவில் மேற்படி கைத்தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை மற்றும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற அசௌகரியங்கள் காரணமாக மேற்படி கைத்தொழில்துறை வீழ்ச்சிடைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ரின் மீன்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் கைத்தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்குமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3265/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை” நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணசபை பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3319/2022

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நுகரப்படும் முட்டை வகைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கைக்கு முட்டை இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி முட்டை வகைகள் யாவை என்பதையும்;

(iv) முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றளவில் முட்டையொன்றின் விற்பனை விலை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வெவ்வேறு விலைகளின் கீழ் கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், கோழி இறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலையொன்றை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அக்கட்டுப்பாட்டு விலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3334/2022

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவாக திரிபோஷா வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) திரிபோஷா பொதியொன்றில் உள்ளடங்கியுள்ள ஊட்டச்சத்து கலவை யாது;

(iii) திரிபோஷா உற்பத்திக்காக வருடாந்தம் செலவிடப்படும் நிதித்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை திரிபோஷா லிமிட்டெட் நிறுவனத்தினால் வர்த்தக நோக்கில் சுபோஷா எனும் பெயரில் உற்பத்தியொன்று சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றதா;

(ii) மேற்படி உற்பத்தியினால் மேற்குறித்த நிறுவனம் ஈட்டும் வருடாந்த வருமானம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் அறிக்கைகளுக்கு அமைய குழந்தைப் போசாக்கின்மையினால் பாதிக்கப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை வகிக்கும் இடம் யாது ;

(ii) இலங்கையில் சிறுவர் போசாக்கின்மை உயர் மட்டத்தை அடைந்திருப்பின், இதற்கான காரணங்கள் யாவை;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3371/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களிலும் தங்கியுள்ளார்கள் என்பதையும்;

(ii) தற்போது போர் நிறைவடைந்துள்ள போதிலும், மேற்படி குழுவைச் சேர்ந்த சுமார் 100,000 பேருக்கு இலங்கைக்கு மீண்டும் வருகைதர இயலாதுள்ளதென்பதையும்;

(iii) அம்மக்களில் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களில் தங்கியுள்ள பலர், இந்திய அரசாங்கத்தால் வீசா வழங்கப்படாததால் இலங்கைக்குத் திரும்பும் போது, இவர்கள் இந்தியாவில் தங்கியிருந்த முழுக் காலத்திற்குமான வீசா கட்டணத்தைச் செலுத்த நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3582/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சைப்ரஸ் குடியரசில் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை கொன்சியுலர் ஜெனரல் அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலகம் மூடப்பட்டதன் காரணமாக சைப்ரஸ் குடியரசில் பணிபுரியும் இலங்கை ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு கடும் தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3853/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கந்தானை, (ஆனியாகந்த) பிரதேச வைத்தியசாலைக்குரிய கட்டிடமொன்று கந்தானை தாதியர் பாடசாலையில் கல்வி பயிலும் தாதி மாணவிகளின் கற்றல் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) தாதி மாணவிகளின் கற்றல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள், கொழும்பு-வடக்கு போதனா வைத்தியசாலையிலும் குறித்த பிரதேசத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், கந்தானை, (ஆனியாகந்த) பிரதேச வைத்தியசாலையின் மேற்படிக் கட்டிடத்தை மீண்டும் அவ்வைத்தியசாலைக்கு ஒப்படைப்பது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கொழும்பு – வடக்கு போதனா வைத்தியசாலையில் காணப்படும் அதிக நெரிசலுக்கு மாற்றுத் தீர்வாக கந்தானை (ஆனியாகந்த) பிரதேச வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 பிரிவுகள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுகள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 27(1) மற்றும் (5), 28 (2) மற்றும் (3), 64(2) மற்றும் 70 பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பிரதேசத்தின் மற்றும் அதன் இடப்பரப்பில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆளாகாத் தகைமை பெறுவது தொடர்பில் கொழும்பு நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 27(1), 41(3)(ஊ) மற்றும் 41(9) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023, சனவரி 05, வியாழக்கிழமை)**

350/2022

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, மரண தண்டனையை விதித்த நீதிமன்றம், மரண தண்டனை விதிக்கப்பட்ட திகதி மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கான காரணம் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நபர்களுள் சனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ் ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் விடுதலை செய்யப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 38/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு,—

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமானது (UNICEF) இலங்கையில் சிறுவர் போசாக்கின்மை அதிகரித்து வருவதாக இரண்டாவது தடவையாகவும் அறிவித்துள்ளதாலும்;

இலங்கையில் சிறுவர்களின் உண்மையான போசாக்கின்மை நிலைமை தொடர்பில் பல்வேறான மாறுபட்ட கருத்துகளும் புள்ளிவிபரங்களும் முன்வைக்கப்படுகின்றதாலும்;

கடுமையான போசாக்கின்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக காணப்படுவதாக பல பகுதிகளில் இருந்தும் பதிவாகி வருகின்றதாலும்;

நீண்ட காலமாக போசாக்கின்மை நிலைமை காணப்படுவதால் எதிர்கால சந்ததியினரின் சுகாதாரம், கல்வி மற்றும் சமூக அபிவிருத்தியின் மீது கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதாலும்;

எதிர்வரும் காலப்பகுதியில் மேலும் 22 இலட்சம் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதாலும்;

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் (UNICEF) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதாலும்;

இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) குழுவானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இருபத்தொரு (21) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு அது அவசியமென தீர்மானிக்கும் வகையில் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது கூட்டத்தொடரின் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை முன்வைப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு காலப் பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.